# *சுயகற்றல் செயற்பாடு*

## தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் 10-11

**பின்வரும் வினாக்களுக்கான விடைகளை தெளிவாக எழுதி உமது பாடசாலை ஆரம்பிக்கும் போது தமிழ் பாட ஆசிரியரிடம் ஒப்படைக்குக.**

1.சார்பெழுத்தின் வகைகளை குறிப்பிட்டு அவற்றின் உபபிரிவுகளை விளக்குக.

2.எழுத்தின் பரம்பல் என்றால் என்ன? அவற்றின் வகைகளை விரிவாக விளக்குக.

3.சொல் என்றால் என்ன? சொல்லின் அமைப்பின் வகைகளை உதாரணங்களுடன் விளக்குக.

4.பகுபத உறுப்புக்களை குறிப்பிட்டு உதாரணத்துடன் விளக்குக.

5.வேற்றுமை என்றால் என்ன? வேற்றுமைகளை குறிப்பிட்டு அவற்றின் உருபு, சொல்லுருபு, பொருள் என்பவற்றினை விளக்குக.

6.சொற்புணர்ச்சி என்றால் என்ன?
பின்வரும் புணர்ச்சிகளை விளக்குக.

அ. உயிர் முன் உயிர் புணர்தல்.

ஆ. உயிர் முன் மெய் புணர்தல்.

இ. மெய் முன் உயிர் புணர்தல்.

ஈ. மெய் முன் மெய் புணர்தல்.

7.கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணக்கருக்களை உதாரணங்களுடன் விளக்குக.

- ஆக்கப்பெயர்
- கூட்டுப்பெயர்
- மாற்றுப்பெயர்
- வினையாலணையும் பெயர்
- தொழிற்பெயர்
- காரண இடுகுறிப் பெயர்
- இயல்பு வழக்கும், தகுதி வழக்கும்

8.உமது நாட்டு மக்களின் நலமான வாழ்வினை கருத்திற்கொண்டு கொரோனா நோய்த்தொற்றிலிருந்து விடுதலையடைய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப்பிரசுரம் ஒன்று எழுதுக.

9.தமிழர் பண்பாட்டின் பாரம்பரிய வாழ்வியல் மனித உடல் உள ஆரோக்கியத்தினை மேம்படுத்தவல்லது என்ற தொனிப் பொருளில் பத்திரிகைச் செய்தி ஒன்று எழுதுக.

10.சமூக நலனில் அக்கறையுள்ள ஒருவராக தங்களை கருதி அண்மைய காலங்களில் எமது நாட்டில் அதிகரித்து வரும் தொற்று நோய்கள் தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்துவதில் ஊடகங்களின் பொறுப்பான, பொறுப்பற்ற செயற்பாடுகள் தொடர்பாக பத்திரிகை ஆசிரியருக்கு கடிதமொன்று எழுதுக.